# P.L.RAJ IAS & IPS ACADEMY

**Building Bureaucrats Since 2006**

## June 23, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. பிரிட்டன் பிரதமரும், அந்நாட்டின் ஆளும் தொழிலாளர் கட்சியின் தலைவருமான கியர் ஸ்டார்மர் (63) தனது பதவியை ராஜிநாமா செய்தார்.

(i) வரும் -செப்டம்பருக்குள் புதிய பிரதமர் பொறுப்பேற்பார் என்றும், அதுவரை தாம் இடைக்காலப் பிரதமராக நீடித்து, சுமுகமான அதிகாரப் பகிர்வுக்கு முழு ஆதரவை வழங்குவதாகவும் அவர் உறுதியளித்தார்.

(ii) பிரிட்டனில் பிரதமர் பதவியேற்புதற்கு ஆளுங்கட்சியின் தலைவராக தேர்வாக வேண்டும். ஆண்டி பர்ன்ஹாமுக்குக் கட்சியில் பெரும் ஆதரவு இருப்பதால், அவர் போட்டியின்றி ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஜூலை மத்தியில் பிரதமராகப் பொறுப்பேற்கக் கூடும். போட்டி உருவாகும் சூழலில், செப்டம்பர் மாதம் நாடாளுமன்றம் மீண்டும் கூடுவதற்குள் புதிய தலைவர் தேர்ந்தெடுக்கப்படுவார்.

(iii) கியர் ஸ்டார்மரின் ராஜிநாமா மூலம், பிரிட்டன் கடந்த 10 ஆண்டுகளில் தனது 7-ஆவது பிரதமரைத் தேர்ந்தெடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. முன்னதாக, கன்சர்வேட்டிவ் கட்சி ஆட்சியில் அடுத்தடுத்து பிரதமர்கள் மாற்றப்பட்ட வரிசையில், தற்போது தொழிலாளர் கட்சியிலும் இந்த மாற்றம் நிகழ்ந்துள்ளது.

2. அமெரிக்கா-ஈரான் இடையே அண்மையில் எட்டப்பட்ட இடைக்கால ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக, ஈரானின் கச்சா எண்ணெய் உற்பத்தி, விநியோகம் மற்றும் விற்பனை மீதான பொருளாதாரத் தடைகளை அமெரிக்கா 60 நாள்களுக்குத் தற்காலிகமாக நீக்கியுள்ளது.

(i) இந்த உரிமம் வரும் ஆக. 21 வரை அமலில் இருக்கும் என்றும், இதன்மூலம் 1990-களுக்குப் பிறகு முதன்முறையாக ஈரான் எண்ணெய் அமெரிக்காவுக்குள் இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும் அமெரிக்க நிதியமைச்சர் ஸ்காட் பெசன்ட் தெரிவித்தார்.

(ii) முன்னதாக, ஸ்விட்சர்லாந்தின் பர்ஹன்ஸ்டாக் நகரில் பாகிஸ்தான் மற்றும் கத்தார் நாடுகளின் மத்தியஸ்தத்தில் நடைபெற்ற உயர்நிலைப் பேச்சுவார்த்தையின் முடிவில், அடுத்த 60 நாள்களுக்குள் இறுதி ஒப்பந்தத்தை எட்டுவதை நோக்கமாகக் கொண்ட ஒரு செயல்திட்டத்துக்கு அமெரிக்காவும் ஈரானும் ஒப்புக்கொண்டன.

(iii) பேச்சுவார்த்தை முடிவுகள் குறித்து மத்தியஸ்த நாடுகள் வெளியிட்ட கூட்டறிக்கையில், ‘நேர்மறையான மற்றும் ஆக்கபூர்வமான சூழலில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் முன்னேற்றங்கள் ஊக்கமளிக்கின்றன.

(iv) ஹோர்முஸ்நீரிணை தடையின்றி இயங்குவதை உறுதி செய்யவும், தெற்கு லெபனானில் போர் நிறுத்தத்தைக் கண்காணிக்கவும் இரு நாடுகளும் புதிய பாதுகாப்பு வழிமுறைகளை உருவாக்க ஒப்புக்கொண்டுள்ளன.

(v) பேச்சுவார்த்தைகளை மேற்பார்வையிடவும், அணுசக்தி மற்றும் பொருளாதாரத் தடைகள் குறித்த தொழில்நுட்பக் குழுக்களைக் கண்காணிக்கவும் ஒரு உயர்மட்டக் குழு

அமைக்கப்படும்' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(vi) பேச்சு வார்த்தையில் அமெரிக்க குழுவுக்கு அந்நாட்டின் துணை அதிபர் ஜே.டி.வான்ஸும், ஈரான் குழுவுக்கு அந்நாட்டு நாடாளுமன்ற அவைத் தலைவர் முகமது பாகர் கலிபாஃப்பும் தலைமை தாங்கினர். பேச்சுவார்த்தைக்குப் பின் செய்தி யாளர்களிடம் பேசிய ஜே.டி.வான்ஸ், ‘இறுதி ஒப்பந்தத்துக்கான வலுவான அடித்தளம் அமைக்கப்பட்டுள்ளது. மத்திய கிழக்கில் அமைதியையும் வளத்தையும் மேம்படுத்த அனைவரும் இணைந்து செயல்படும் ஒரு புதிய எதிர்காலத்தைக் காண்கிறோம்' என்றார்.

(vii) அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் பேச்சுவார்த்தையில் நேரடியாகப் பங்கேற்கவில்லை என்றாலும், அவரின் சமூக ஊடகப் பதிவுகள் பேச்சு வார்த்தையில் இடையூறை ஏற்படுத்தின. ஈரானை எச்சரிக்கும் வகையில் டிரம்ப் வெளியிட்ட சில கருத்துகளால் பேச்சுவார்த்தை தற்காலிகமாக நிறுத்தப்பட்ட போதிலும், ஜே.டி. வான்ஸின் தலையீட்டால் நள்ளிரவைத் தாண்டியும் விவாதங்கள் தொடர்ந்து வெற்றிகரமாக நிறைவடைந்தன.

3. முல்லைப் பெரியாறு அணை பாதுகாப்பு மதிப்பீட்டு குழுவில் இருந்து கேரள பிரதிநிதி நீக்கப்பட்டதற்கு, அந்த மாநிலத்தில் ஆட்சியில் உள்ள காங்கிரஸ், எதிர்க்கட்சியான மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் எம்.பி.க்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

(i) கேரளத்தில் உள்ள முல்லைப் பெரியாறு அணையை தமிழக அரசு பராமரித்து வருகிறது. மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை, ராமநாதபுரம் ஆகிய 5 மாவட்டங்களின் விவசாயத் தேவைக்கும், பல மாவட்ட மக்களின் குடிநீருக்கும் அந்த அணை ஆதாரமாக உள்ளது. அதே வேளையில், முல்லைப் பெரியாறு அணை பாதுகாப்பானதாக இல்லை; அதன் அருகே புதிதாக மற்றொரு அணை கட்ட வேண்டும் என கேரளம் வலியுறுத்தி வருகிறது. இந்த விவகாரம் குறித்து தமிழக அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்று கேரளத்தின் புதிய முதல்வராகப் பதவியேற்ற வி.டி. சதீசன் அண்மையில் தெரிவித்தார்.

(ii) இந்நிலையில், அந்த அணையின் பாதுகாப்பு மதிப்பீட்டு குழுவில் (சிடிஎஸ்இசி) இருந்து கேரள பிரதிநிதியான டி.கே.சிவராஜன் அண்மையில் நீக்கப்பட்டார்.

4. இந்தியாவுக்கு அப்பாச்சி ஹெலிகாப்டர்கள், இலகுரக ஹௌவிட்ஸர் பீரங்கிகள் தொடர்பான சாதனங்கள், சேவைகளை சுமார் ரூ.4,500 கோடிக்கு விற்பது தொடர்பான அதிகாரபூர்வ அறிவிக்கையை அமெரிக்கா வெளியிட்டது.

(i) அமெரிக்கத் தயாரிப்பு அதிநவீன தாக்குதல் ரக ஹெலிகாப்டரான அப்பாச்சி ஏஎச்64இ ஹெலிகாப்டர்கள், இந்திய ராணுவத்தால் பயன்படுத்தப் படுகின்றன. இதேபோல் உயரமான மலைப்பகுதியில் உள்ள இலக்குகளை தரையில் இருந்து குண்டுவீசி தாக்குதல் நடத்த பயன்படும் இலகுரக ஹௌவிட்ஸர் ரக பீரங்கிகளும் இந்திய ராணுவத்தால் பயன்படுத் தப்பட்டு வருகின்றன.

(ii) இவற்றுக்குத் தேவையான சாதனங்கள் மற்றும்பராமரிப்பு சேவைகளை இந்தியாவுக்கு அமெரிக்கா அளிக்கிறது. இது தொடர்பான அறிவிக்கையை அமெரிக்க மத்திய அரசிதழில், வெளிநாடுகளுக்கு ராணுவ தளவாடங்களை விற்கும் பிரிவுகளை கையாளும் அந்த நாட்டு பாதுகாப்பு தளவாட ஒத்துழைப்பு அமைப்பு வெளியிட்டுள்ளது. அதில், அப்பாச்சி ஹெலிகாப்டர்களுக்கான சாதனங்கள், பராமரிப்பு சேவைகளை அமெரிக்கா அளிக்க வேண்டுமென இந்தியா கோரிக்கை விடுத்திருந்ததாகவும், அதையேற்று சுமார்

ரூ.1,873 கோடிக்கு அவற்றை இந்தியாவுக்கு அமெரிக்கா விற்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

(iii) இதேபோல், ஹெளவிட்ஸர் தொடர்பான இலகுரக பீரங்கிகள் சாதனங்கள், சேவைகளை அளிக்க வேண்டுமென இந்தியா விடுத்த கோரிக்கையை ஏற்று, ரூ.2,175 கோடிக்கு அவற்றை விற்பதாகவும் கூறப்பட்டிருந்தது.

(iv) இந்த சாதனங்கள் கிடைப்பது மூலம், நடப்பு மற்றும் எதிர்கால அச்சுறுத்தல்களை எதிர் கொள்வதற்கான இந்தியாவின் திறன் மேம்படும், உள்நாட்டு பாதுகாப்பை வலுப்படுத்தவும், பிராந்திய அச்சுறுத்தல்களை முறியடிக்கவும் இந்தியாவுக்கு உதவும் என்றும் அமெரிக்க பாதுகாப்புத் துறை தெரிவித்துள்ளது. அதேபோல், இந்த விற்பனையால் தெற்காசிய பிராந்தியத்தில் ராணுவ வல்லமை சமநிலை எந்த விதத்திலும் பாதிக்கப்படாது என்றும், அதுபோல அமெரிக்க ராணுவத்தின் தயார் நிலையிலும் இது தாக்கத்தை ஏற்படுத்தாது என்று அமெரிக்க பாதுகாப்புத் துறை தெரிவித்துள்ளது.

5. கர்நாடக மாநிலம் பெங்களூரை தலைமையகமாகக் கொண்ட க்ரெட் நிறுவனத்தின் நிறுவனரான குணால் ஷா, வாட்ஸ் ஆப் தகவல் பரிமாற்ற தளத்தின் உலகளாவிய தலைமைச் செயல் அதிகாரியாக (சிஇஓ) நியமிக்கப்பட்டுள்ளார்.

(i) வாட்ஸ் ஆப் தளத்தின் தலைமை நிறுவனமான மெட்டாவின் நிறுவனர் மார்க் ஸுக்கர்பர்க் இதனைத் தெரிவித்தார்.

(ii) வாட்ஸ்-ஆப்பின் உலகளாவிய சிஇஓ-வாக 7 ஆண்டுகள் பதவி வகித்த வில்காத்கார்ட், அந்தப்பதவியில் இருந்து விலகி, மெட்டாவில் புதிய சேவைகளை உருவாக்கும் பணியில் ஈடுபட உள்ளார். இதையடுத்து அந்தப் பதவிக்கு குணால் ஷா நியமிக்கப்பட்டுள்ளார். இதுகுறித்து மெட்டா நிறுவனர் மார்ச் ஸுக்கர்பர்க் தெரி வித்ததாவது:

- மெட்டாவில் வாட்ஸ் ஆப்பின் அடுத்த தலைவராக குணால் ஷா இணையவுள்ளார். இந்தியாவின் மிக முக்கிய தொழில்நுட்ப நிறுவனங்களில் ஒன்றாக க்ரெட் நிறுவனத்தை அவர் உருவாக்கியுள்ளார்.
- புதிய விஷயங்களைக் கட்டியெழுப்பும் அவரின் மனோபாவமும், உலகளாவிய கண்ணோட்டமும் உலகின் மிகப் பெரிய தகவல் பரிமாற்ற செயலியான வாட்ஸ் ஆப்பை நடத்த சிறப்பாக உதவும் என்று தெரிவித்துள்ளார்.
- மேலும், குணால் ஷா உருவாக்கிய க்ரெட் நிதி தொழில்நுட்ப நிறுவனத்தில் மெட்டா நிறுவனம் 900 மில்லியன் டாலரை (சுமார் ரூ.8,500 கோடி) முதலீடு செய்ய உள்ளது.
- இதன் மூலம் க்ரெட் நிறுவனத்தில் மெட்டா நிறுவனம் சிறுபான்மை முதலீட்டாளராக விளங்கும். எனினும் நிர்வாகத்தில் பங்கு பெறாது. அதே வேளையில், வாட்ஸ் ஆப்பில் பணிபுரிவதற்காக க்ரெட் நிறுவனத்தில் தனக்குள்ள பங்கை கைவிடப் போவதில்லை என்று குணால் ஷா தெரிவித்துள்ளார்.

6. பிரதமர் நரேந்திர மோடி மற்றும் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் இடையே ஒப்புக்கொள்ளப்பட்ட இருதரப்பு இடைக்கால வர்த்தக ஒப்பந்தத்தை முன்னெடுத்துச் செல்வதற்கான பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்காக அமெரிக்க வர்த்தக பிரதிநிதி (யுஎஸ்டிஆர்) ஜேமிஸன் க்ரீயர் இந்த வாரத்தில் இந்தியா வர உள்ளார்.

(i) பிரான்ஸில் நடைபெற்ற ஜி7 நாடுகள் கூட்டமைப்பின் உச்சி மாநாட்டின்போது, பிரதமர் நரேந்திர மோடியும் அமெரிக்க அதிபர் டிரம்ப்பும் சந்தித்துப் பேசினர். அப்போது, இரு

நாடுக ளிடையேயான இருதரப்பு வர்த்தக ஒப்பந்த நடைமுறைகளை விரைவுபடுத்தும்படி இரு நாட்டு அதிகாரிகளுக்கும் பிரதமர் நரேந்திர மோடியும், அமெரிக்க அதிபர் டிரம்ப்பும் அறிவுறுத்தினர்.

(ii) இந்தச் சூழலில் இருநாடுகளிடையேயான இருதரப்பு இடைக்கால வர்த்தக ஒப்பந்த நடைமுறைகளை முன்னெடுத்துச் செல்தற்காக ஜேமிஸன் க்ரீயர் இந்தியா வருகிறார். இதுகுறித்து அமெரிக்க வர்த்தக பிரதிநிதியின் அலுவலகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

- அமெரிக்கா - இந்தியா இடையேயான விரிவான இருதரப்பு வர்த்தக ஒப்பந்தப் பேச்சுவார்த்தைளின் ஒரு பகுதியாக, இரு நாடுகளிடையே அண்மையில் ஒப்புக்கொள்ளப்பட்ட இருதரப்பு இடைக்கால வர்த்தக ஒப்பந்தம் மற்றும் அதுதொடர்பாக வரலாற்றுச் சிறப்புமிக்க அமெரிக்க - இந்திய கூட்டறிக்கை குறித்து இந்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் பியூஷ் கோயல் மற்றும் மூத்த அதிகாரிகளுடன் ஆலோசிப்பதற்காக அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதி ஜேமிஸன் க்ரீயர் இந்த வாரத்தில் இந்தியா செல்கிறார் என்று குறிப்பிடப்பட்டது.
- முன்னதாக, இந்த இடைக்கால வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக தில்லியில் கடந்த ஜூன் 2, 4-ஆம் தேதிகளில் இரு நாடுகளின் அதிகாரிகள் அளவிலான பேச்சுவார்த்தை நடை பெற்றது குறிப்பிடத்தக்கது. அது போல, இந்தியா உள்பட 54 உலக நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீது கூடுதலாக 12.5 சதவீத வரி விதிக்க அமெரிக்க அரசிடம் அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதி (யுஎஸ்டிஆர்) அண்மையில் பரிந்துரைத்த நிலையில், அவரின் இந்தியப் பயணம் முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகிறது.
- இந்தியா உள்ளிட்ட உலக நாடுகள் மீது அமெரிக்க அதிபர் டிரம்ப் விதித்த பரஸ்பர வரி விதிப்பு செல்லாது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்ததைத் தொடர்ந்து, இந்தியா, சீனா, ஜப்பான் உள்ளிட்ட வர்த்தக கூட்டுறவு நாடுகளின் நியாயமற்ற வர்த்தக நடைமுறைகள் அமெரிக்க உற்பத்தியை எந்த அளவுக்கு பாதித்துள்ளது என்பதைக் கண்டறியும் நோக்கில் அமெரிக்க வர்த்தகச் - சட்டம் 1974-இன் பிரிவு 301-இன் கீழ் யுஎஸ்டிஆர் மூலம் புதிய விசாரணைக்கு அமெரிக்கா உத்தரவிட்டது. அதன்படி தீவிர ஆய்வு மேற்கொண்ட யுஎஸ்டிஆர் ஜேமிஸன் க்ரீயர், அண்மையில் தனது பரிந்து ரையை சமர்ப்பித்தார். அதில் இந்தியா உள்பட 54 நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீது கூடுதலாக 12.5 சதவீத வரியை விதிக்க பரிந்துரைத்தார்.

7. மங்கோலிய அதிபர் உக்னாகின் குரெல்சுக்கை இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் சந்தித்தார்.

(i) மங்கோலியா மற்றும் தென் கொரியாவுக்கு அரசுமுறைப் பயணம் மேற்கொண்டுள்ள ஜெய்சங்கர் முதல்கட்டமாக மங்கோலிய தலைநகர் உலான்பாட்டருக்கு வந்தடைந்தார்.

(ii) மங்கோலியாவைத் தொடர்ந்து தென் கொரியாவுக்கு செல்லும் ஜெய்சங்கர் அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் சோ ஹியுனை சந்திக்கிறார். அதன்பிறகு நடைபெறும் அமைதி மற்றும் வளமைக்கான ஜெஜு ஆலோசனைக் கூட்டத்தில் அவர் பங்கேற்று உரையாற்றுகிறார். சர்வதேச விவகாரங்கள் குறித்து பல்வேறு துறை நிபுணர்கள் கலந்துரையாடும் முக்கிய களமாக ஜெஜு ஆலோசனைக் கூட்டம் திகழ்கிறது.

8.தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவர் - வெ. ராமசுப்பிரமணியன்.

9. நடைபாதைகளில் பாதுகாப்பாக நடக்கும் உரிமையை ஒரு அடிப்படை அரசியலமைப்பு உரிமையாக உயர்த்தும் உச்ச நீதிமன்றத்தின் முக்கியத் தீர்ப்பு.

(i) உச்ச நீதிமன்றத்தின் முக்கியத் தீர்ப்பு

- நீதிபதிகள் பி.எஸ். நரசிம்மா மற்றும் எஸ்.வி. பட்டி ஆகியோர் அடங்கிய உச்ச நீதிமன்ற அமர்வு, தெளிவாக வரையறுக்கப்பட்ட மற்றும் நன்கு பராமரிக்கப்படும் நடைபாதைகளில் நடப்பது பாதசாரிகளின் அடிப்படை உரிமை என்று அறிவித்தது.
- வாகனப் போக்குவரத்திற்கான சாலைகளை அமைப்பதை விட, பாதசாரிகளுக்கான நடைபாதைகளை அமைப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்று நீதிமன்றம் வலியுறுத்தியது.
- கர்நாடகாவைச் சேர்ந்த 5 வயது சிறுவன் ஒருவன், தன் தந்தையுடன் பள்ளிக்கு நடந்து சென்றபோது டேங்கர் லாரி மோதி உயிரிழந்த வழக்கிலிருந்து இத்தீர்ப்பு உருவானது.

(ii) அரசியலமைப்பு மற்றும் சட்ட அடிப்படை

- பொது இடங்களில் பாதுகாப்பாக நடப்பதற்கான உரிமை இந்திய அரசியலமைப்பால் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளதாக நீதிமன்றம் குறிப்பிட்டது.
- குறிப்பாக, இந்த உரிமை, நாடு முழுவதும் சுதந்திரமாக நடமாடுவதை உறுதி செய்யும் பிரிவு 19(1)(d) மற்றும் வாழ்வுரிமை மற்றும் தனிநபர் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் பிரிவு 21 ஆகியவற்றிலிருந்து பெறப்படுகிறது.
- தூய்மையான சூழல், இலவசக் கல்வி மற்றும் தனியுரிமை போன்ற உரிமைகளை அடிப்படை உரிமைகளின் வரம்பிற்குள் கொண்டுவர வழிவகுத்த 1978-ஆம் ஆண்டின் மேனகா காந்தி வழக்கின் உரிமை விரிவாக்கத்துடன் இந்த வழக்கு ஒப்பிடப்படுகிறது.

(iii) உள்ளூர் மற்றும் மத்திய அதிகார அமைப்புகளின் கடமை

- அகலமான மற்றும் பாதுகாப்பான நடைபாதைகளை உறுதி செய்யும் பொறுப்பு கிராம பஞ்சாயத்துகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் ஆகியவற்றிடம் உள்ளது.
- குடிமக்களுக்கான நடைபாதைகள் என்ற அடிப்படைத் தேவையைப் புறக்கணித்துவிட்டு, அதிவேக விரைவுச் சாலைகளுக்கு முன்னுரிமை அளிக்கும் அரசுகளை நீதிமன்றம் விமர்சித்தது.
- நாடு முழுவதும் உள்ள அனைத்து சாலைகளிலும் நடைபாதைகள் அமைப்பதை கட்டாயமாக்கும் வகையில் மத்திய அரசு ஒரு குறிப்பிட்ட சட்டத்தை இயற்ற வேண்டும் என்று அந்த அமர்வு பரிந்துரைத்தது.

(iv) பாதசாரிகள் உயிரிழப்பு குறித்த கவலைக்குரிய புள்ளிவிவரங்கள்

- சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகத்தின் 2024-ஆம் ஆண்டு தரவுகளின்படி, இந்தியாவில் சாலை விபத்துகளில் 19,680 பாதசாரிகள் உயிரிழந்துள்ளனர்; இது மொத்த சாலை விபத்து உயிரிழப்புகளில் 20.6% ஆகும்.
- பாதசாரிகள் உயிரிழப்பில் தமிழ்நாடு நாட்டில் முதலிடத்தில் உள்ளது (4,712 உயிரிழப்புகள்); அதைத் தொடர்ந்து பீகார் (4,149), மகாராஷ்டிரா (3,344) மற்றும் மேற்கு வங்கம் (3,241) ஆகிய மாநிலங்கள் உள்ளன.

(v) சவால்கள்: ஆக்கிரமிப்புகள் மற்றும் தவறான முன்னுரிமைகள்

- தற்போதுள்ள நடைபாதைகள் பெரும்பாலும் மிகவும் குறுகலாக (4–5 அடி மட்டுமே) உள்ளன; மேலும், கடைகள், தெருவோர வியாபாரிகள் மற்றும் இருசக்கர வாகன நிறுத்துமிடங்களால் அவை அடிக்கடி ஆக்கிரமிக்கப்படுகின்றன.
- இத்தகைய தடைகளால் பாதசாரிகள் பிரதான சாலைக்குச் செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது, இது அவர்களைப் பெரும் ஆபத்துக்குள்ளாக்குகிறது.
- பொதுவெளியைப் பயன்படுத்தும் உரிமை பெற்றவர்கள் என்ற கண்ணோட்டத்தில் பார்க்காமல், பாதசாரிகளை வெறும் 'தடைகளாக' வாகன ஓட்டிகள் கருதும் போக்கு அதிகரித்து வருகிறது.

(vi) சீர்திருத்தங்களுக்கான பரிந்துரைகள்

- பாதசாரிகளின் உரிமைகள் மற்றும் விபத்துகளுக்கான நியாயமான இழப்பீடு ஆகியவை குறித்து ஆய்வு செய்து கொள்கைகளை வகுக்குமாறு சட்ட ஆணையத்திற்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.
- சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள், ஊரக வளர்ச்சி, மற்றும் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் உள்ளிட்ட முக்கிய அமைச்சகங்கள், பாதசாரிகளின் பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.
- நீதிமன்றத் தீர்ப்பைத் தொடர்ந்து, அதிகாரிகள் விரைந்து செயல்பட்டு ஆக்கிரமிப்புகளை நிரந்தரமாக அகற்ற வேண்டும்; அத்துடன் அனைத்து சாலைகளின் இருபுறமும் தரமான நடைபாதைகளை அமைக்க வேண்டும்.